Ordinary

Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167298

1. District : Tiruppur மாவட்டம் | PS: V&AC காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 4/2026/AC/TPR முத.அ. எண் | Date: 08.06.2026 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in Sections பிரிவுகள்: 7(a) 8(b)
(ii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் : 03.06.2026 | Date to நாள் வரை : At about 16.30 hrs
Time Period : நேர அளவு | Time from நேரம் முதல் : 09.06.2026 | Time to நேரம் வரை : At about 17.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.06.2026 | Time நேரம் : 19.20 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.06.2026 G.D. Vol.1 | Time நேரம் : 19.20 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 9 kms South East ~~East / South~~
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Rakkiapalayam – Seenthampalayam Road Ganapathipalayam Working site Tiruppur and Overflow
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Murugan | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. Ramasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52/2026 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
Date of Issue : வழங்கப்பட்ட நாள் – | Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
(f) Occupation : தொழில் Contractor | (g) Address : முகவரி Door No. 191 CTC Colony, 9th Street, Dharapuram Road, K. Chettipalayam, Tiruppur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Subramani, Junior Engineer, Zone-III Nallur, Tiruppur City Municipal Corporation, Tiruppur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

8/6/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 08.06.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Basilekha,
Rank: நிலை Inspector of Police, No. எண் .....
VSAC, Tiruppur.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 4/2026/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 08.06.2026- ம் தேதி மாலை 19.20 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.R.முருகன்,த/பெ.P.ராமசாமி, கதவு எண்.191, CTC காலனி, 9-வது தெரு, தாராபுரம் ரோடு, K.செட்டிபாளையம், திருப்பூர் 641 606. என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் அனுப்புனர் திரு.R.முருகன்,த/பெ.P.ராமசாமி, கதவு எண்.191 CTC காலனி, 9-வது தெரு, தாராபுரம் ரோடு, K.செட்டிபாளையம், திருப்பூர் 641 606. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ரோடு, K.செட்டிபாளையம் CTC காலனி 9-வது தெருவில் வசித்து வருகிறேன். நான் Hari Constructions என்ற பெயரில் A+ காண்ட்ராக்ட்டராக பதிவு செய்து 30 வருடமாக நெடுஞ்சாலை, மாநகராட்சி, DRDA, PWD அரசு ஒப்பந்த வேலைகளை செய்து வருகிறேன். திருப்பூர் மாநகராட்சியில் SPECIAL FUND 2025-2026-ல் Package No.04 மாநகராட்சி பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டது. அந்த டெண்டரில் நான் கலந்து கொண்டேன். திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.47 செந்தில் கார்டன் உள்ளிட்ட பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணியை ரூ.1,53,63,576/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு எண்.227/2025-26/CE.DMA நாள் 27.05.2025- படி திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் பணி உத்தரவு எனக்கு வழங்கி இருந்தார். மேலும் திருப்பூர் மாநகராட்சியில் SPECIAL FUND 2025-2026-ல் Package No.05 மாநகராட்சி பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டது. அந்த டெண்டரில் நான் கலந்து கொண்டேன். திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.47 செந்தில் கார்டன், மகாலட்சுமி நகர், காளிபாளையம் AD காலனி மெயின் ரோடு, தர்சூலம் நகர், வஞ்சிவரம்புதூர், வெங்கடாசலபதி நகர்,

புதுப்பாளையம் ராயபுரம் பகுதி AD காலனி, புதுப்பாளையம் செந்தில் நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணியை ரூ.1,71,37,469/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு எண்.228/2025-26/CE.DMA நாள் 27.05.2025- படி திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் பணி உத்தரவு எனக்கு வழங்கி இருந்தார். அதனை தொடர்ந்து அக்ரிமெண்ட் போடப்பட்டு அந்த தார்சாலை பணியை குறிப்பட்டுள்ள அளவிலும், தரத்திலும், பணி முடிக்க வேண்டிய காலத்திலும் பணிகளை முடித்து கொடுத்தேன். பணி முடித்த பின்னர் கோயம்புத்தூரில் உள்ள கிருஷ்ணா பொறியியல் கல்லூரியிலிருந்து பொறியாளர் குழுவினர் தார்சாலையை ஆய்வு செய்து மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு அறிக்கை கொடுத்தனர். அந்த பணிக்கான எம்.புக் மற்றும் பில்களை திருப்பூர் மாநகராட்சி நல்லூரில் உள்ள 3-வது மண்டலத்தில் வேலை செய்யும் JE திரு.சுப்பிரமணி அவர்கள் எழுதினார். அந்த இரண்டு பணிகளுக்கான தொகை எனது நிறுவனத்தின் பெயரில் HDFC வங்கியில் உள்ள அக்கவுண்டிற்கு வந்தது. திருப்பூர் மாநகராட்சியில் 15TH CENTRAL FINANCE COMMISSION (TIED AND UNTIED GRANT) 2025-2026-ல் மாநகராட்சி பகுதிகளில் drainage அமைக்கும் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டது. அந்த டெண்டரில் நான் கலந்து கொண்டேன். திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.46 ஜெய்நகர் எக்ஸ்டென்சன் போஸ்ட் ஆபீஸ் தெரு, ஜெய்நகர் கிழக்கு மெயின் ரோடு, ஜெய்நகர் எக்ஸ்டென்சன் முதல் வீதி, ஜெய்நகர் எக்ஸ்டென்சன் 2-வது வீதி, ஜெய்நகர் எக்ஸ்டென்சன் 3வது வீதி, ஜெய்நகர் எக்ஸ்டென்சன் போஸ்ட் ஆபீஸ் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியை ரூ.1,40,49,722/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு எண்.140/2025-26/S/Z3/CE, TCMC., நாள் 17.10.2025- படி திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் பணி உத்தரவு எனக்கு வழங்கி இருந்தார். அந்த பணியில் 1,20,00,000/- மதிப்பிலான பணிகள் முடிக்கப்பட்டு இன்னும் ரூ.30 லட்சம் மதிப்பிலான பணி செய்யப்படவுள்ளது. ஏற்கெனவே முடித்த பணிக்கான தொகை எனது நிறுவனத்தின் பெயரில் உள்ள HDFC வங்கி அக்கவுண்டிற்கு வந்தது. திருப்பூர் மாநகராட்சியில் 15TH CENTRAL FINANCE COMMISSION (TIED AND UNTIED GRANT) 2025-2026-ல் மாநகராட்சி பகுதிகளில் drainage மற்றும் பாலம் அமைக்கும் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டது. அந்த டெண்டரில் நான் கலந்து கொண்டேன். திருப்பூர் மாநகராட்சி வார்டு எண்.48 கணபதிபாளையம் முதல் பள்ளகாட்டுபுதூர் வரை பாதாள சாக்கடை அமைக்கும்

பணியை ரூ.2,36,47,032/- மதிப்பீட்டில் அமைக்க மதிப்பீட்டு எண்.139/2025-26/S/Z3/CE, TCMC., நாள் 17.10.2025- படி திருப்பூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் பணி உத்தரவு எனக்கு வழங்கி இருந்தார். அந்த பணி தற்போது நடைபெற்று வருகிறது. திருப்பூர் மாநகராட்சி மண்டலம் -3 யை கவனிக்கும் JE திரு.சுப்பிரமணி என்பவர் தான் பணிகளை பார்வையிட்டு அவ்வப்போது அளவீடுகளை எம்.புத்தகங்களில் பதிவு செய்து கையொப்பமிட்டு பில் தயார் செய்து மேலதிகாரிகளுக்கு அனுப்பினால் தான் வேலை செய்ததற்கான பில் தொகை விடுவிக்கப்படும். 48-வது வார்டில் நடைபெற்று கொண்டிருக்கும் drainage பணிக்கான பார்ட் பில்லை எழுதி தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க JE திரு.சுப்பிரமணி அவர்களை நேரில் பார்த்தும், செல்போனில் பேசியும் கேட்டேன். அவர் பில்லை முடித்து கொடுத்து விடுவதாக ஒவ்வொரு முறையும் கூறிவந்தார். 03.6.2026 தேதி மாலை சுமார் 4.30 மணியளவில் ராக்கியாபளையம்-செவந்தாம்பாளையம் ரோட்டில் drainage வேலை நடந்து கொண்டிருக்கும் கணபதிபாளையத்தில் அருள் சினாக்ஸ் கடை அருகில் நான் எனது காரில் இருந்த போது அந்த வழியாக வந்த JE திரு.சுப்பிரமணி அவர்கள் என்னை பார்த்துவிட்டு என் அருகில் வந்து காரில் அமர்ந்து சிறிது நேரம் பேசிவிட்டு அதன் பிறகு காரை விட்டு இறங்கி சாலையோரம் பேசிக்கொண்டிருந்தோம். நான் JE அவர்களிடம் drainage பார்ட் பில் எழுதி விட்டீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர் பில் எழுத ஆரம்பித்துவிட்டேன். நான் செய்து தருகிறேன். ஏற்கனவே உங்களுக்கு 3 கோடி ரூபாய்க்கு 2 ரோடு பில் எழுதி கொடுத்திருக்கிறேன். இதில் எனக்கான கமிசன் 6 லட்சம் ரூபாய் தனியாக கொடுக்க வேண்டும். Drainage பில் 1.37 கோடி ரூபாய்க்கு எழுதி கொடுத்திருக்கிறேன். இதில் 2.40 லட்சம் ரூபாய் தனியாக வேண்டும். மொத்தம் 3 பில்லுக்கும் சேர்த்து கமிசனாக ரூ.8.40 லட்சம் தர வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் 3 பில் தொகையும் வேலை முடிந்து 5 மாதம் கழித்து வந்ததால் எனக்கு ரொம்ப loss ஆகிவிட்டது என்றும், வட்டிக்கு வாங்கி தான் தொழில் செய்து கொண்டிருக்கிறேன் என்றும் loss ஆனதால் என்னால் கொடுக்க முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் atleast ரோடு பில்லுக்கான 6 லட்சம் ரூபாயை கொடுத்தால் தான் drainage பில் ரெடி பண்ணமுடியும் என்று சொன்னார். எனக்கு மொத்த பணமும் முடங்கியுள்ளது என்று சொன்னபோது அவர் முதலில் 5 லட்சம் ரூபாய் கொடுங்கள் மீதமுள்ள பணத்தை பில் வந்த பின்னர் கொடுங்கள் என்று கண்டிப்புடன் சொன்னார்.

நான் சரி பார்க்கலாம் என்று கூறினேன். அதன் பின்னர் அவர் அங்கிருந்து சென்று விட்டார். பின்னர் 5.6.2026 தேதி காலை சுமார் 10.30 மணியளவில் அவரது செல்போன் 9150079089 இருந்து எனது செல்போன் 9944031992 க்கு தொடர்பு கொண்டு எங்கிருக்கிறீர்கள் என்று கேட்டார். நான் சைட்டில் இருப்பதாக கூறினேன். அவர் ஆபீசில் பில் எழுதி கொண்டிருப்பதாகவும், சீக்கிரமாக அமவுண்டை கொடுங்கள் என்று கேட்டார். நான் தெரிந்தவரிடம் பணம் கேட்டிருக்கிறேன். பணம் வந்தவுடன் சொல்வதாக கூறினேன். அதன் பின்னர் 6.6.2026 தேதி மாலை 4 மணியளவில் கணபதிபாளையத்தில் சைட்டில் இருந்த போது JE திரு.சுப்பிரமணி அவர்கள் அங்கு வந்து என்னிடம் தான் பில் ரெடி பண்ணி கொண்டிருப்பதாகவும், அமவுண்ட் ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். நான் இன்னும் பணம் ரெடியாக வில்லை என்று கூறினேன். நீங்கள் அமவுண்டை சீக்கரமாக கொடுங்கள். இல்லையென்றால் பில்லை எழுதாமல் நிறுத்தி விடுவேன் என்று கண்டிப்புடன் கூறினார். அதன் பின்னர் இன்று 8.6.2026 தேதி காலை சுமார் 11 மணியளவில் நான் கணபதிபாளையத்தில் சைட்டில் இருந்த போது அங்கு வந்திருந்த JE திரு.சுப்பிரமணி அவர்கள் வேலை நடைபெறுவதை பார்த்துவிட்டு அமவுண்ட் ரெடியாகிவிட்டதா என்று என்னிடம் கேட்டார். நான் இன்னும் ரெடியாகவில்லை என்று சொன்னபோது தான் இன்றைக்குள் பில் எழுதி முடித்துவிடுவதாகவும், அமவுண்டை ரெடிசெய்துவிட்டு கூப்பிடுங்கள் என்று சொன்னார். அதற்கு நான் சரி பார்க்கலாம் என்று கூறினேன். பின்னர் மாலை சுமார் 5 மணியளவில் JE திரு.சுப்பிரமணி அவர்கள் எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு அமவுண்ட் ரெடி ஆகிவிட்டதா என்று கேட்டார் அதற்கு நான் இல்லை என்று சொன்னேன். அதற்கு நான் பில் ரெடியாகிவிட்டதா என்று மீண்டும் கேட்டேன். அதற்கு நான் இல்லை என்று சொன்னேன். மேலும் நான் அவரிடம் பில் ரெடியாகிவிட்டதா என்று கேட்டதற்கு ரெடி செய்து கொண்டிருக்கிறேன் என்றும் தான் ஏற்கனவே கேட்டவாறு முதலில் ரூ.5 லட்சத்தை கொடுத்தால்தான் பில் தொடர்பான வேலையை முழுமையாக முடிப்பேன் என்று கண்டிப்புடன் கூறினார். எனக்கு திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் -3 JE திரு.சுப்பிரமணி அவர்கள் தற்போது நடைபெற்று கொண்டிருக்கும் drainage பணிக்கு பார்ட் பில் எழுதுவதற்கும், ஏற்கெனவே முடிந்த ரோடு மற்றும் drainage பணிகளுக்கு லஞ்சமாக ரூ.8,40,000/- கேட்டு அதில் முதலில் அட்வான்ஸாக கேட்ட ரூ.5,00,000/- பணத்தை லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. எனவே, திருப்பூர் மாநகராட்சியில் நான்

செய்த தார்சாலை பணிக்கான அளவீடுகளை எம்.புத்தகங்களில் பதிவு செய்து பில் தயார் செய்து கொடுத்தற்கும், பார்ட் பில் தயார் செய்வதற்காகவும் லஞ்சம் கேட்கும் JE திரு.சுப்பிரமணி அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx R.Murugan, 08/06/2026. Sir, Received the complaint on 08.06.2026 at 19.20 hrs and made preliminary verification between 19.20 hrs and 20.00 hrs after getting approval from DVAC, Chennai and registered a case in Tiruppur V&AC Cr.No.4/2026/AC/TPR u/s 7(a) & (b) of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 08.06.2026 between 20.00 hrs to 21.00 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 08/06/2026 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of Tr.R.Murugan, S/o.P.Ramasamy, Door.No.191, CTC Colony, 9 th street, Dharapuram road, K.Chettipalayam, Tiruppur District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 08.06.2026